| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.111/2020 | வா. சா . 1 | தேதி.01.03.2023 | |
| பெயர் | திருமதி.வள்ளியம்மாள் | வயது | 51 |
| க/பெ. | திரு. சுப்பையன் | முகவரி | முத்துக்கல்லூர், வெள்ளியங்காடு |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் வண்டித்தடத்தை அவர்கள் குறுக்காட்டினார்கள் அதற்காக இந்த வழக்கை போட்டுள்ளேன். எந்த சர்வே எண்ணில் வண்டித்தடம் உள்ளது என்றால், 498/2 ஏ ல் உள்ளது. வண்டித்தடத்தின் நீள , அகலத்தை நான் சொல்லவில்லை. புல எண்.498/2 ஏ- ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் அது எனக்கு தெரியாது. இதே பிரதிவாதியின் மீது இதே நீதிமன்றத்தில் நான் இன்னொரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனோ அதையே தான் அந்த வழக்கிலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 498/2 ஏ , 486/1 ஆகிய நிலங்களை ஆரம்பத்தில் சுவாமிநாதன் வகையறாக்கள் தான் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பூமியின் விஸ்தீரணம் மொத்தம் 5.46 ஏக்கர் என்றால் சரிதான்.

2. 498/2 ஏ , 486/1 ஆகிய புல எண்களில் சுவாமிநாதன் எனக்கு நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 486/1 ல் மொத்தமுள்ள 2.95 ஏக்கரில் எனக்கு 80 செண்ட்டை விற்றுவிட்டு மீதி நிலமான 2.15 ஏக்கர் நிலத்தை சுப்பிரமணியன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு 94 செண்ட்டை விற்பனை செய்தார். எனக்கு சுவாமிநாதனும், அவரது குடும்பத்தாரும் தான் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதே சுவாமிநாதன் இந்த நீதிமன்றத்தில் தோன்றி இடைக்கால மனுவில் சாட்சியமளிக்கும்போது எனக்கு 80 செண்ட் நிலத்தை தான் விற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த ஏரியாவில் மொத்தம் எத்தனை சிவில் வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5,6 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன்.

3. காலம்காலமாக முத்தாரம்மன் கோவிலிருந்து வரும் வண்டித்தடத்தை தடுத்ததால் பிரதிவாதிகள் வழக்கு போட்டார்கள் என்றால் வழியில்லாததால் தடுத்தேன். நான் பிரதிவாதிகளை தடுக்ககூடாதென அசல் வழக்கு. 307/2016 ல் உத்தரவு

பிறப்பித்தார்கள் என்றால் ரெக்கார்டை கொடுங்கள் பார்க்கலாம். பிரதிவாதிகள் நிலத்தை விலைக்கு வாங்குவதற்கு முன்பாக இருந்து அந்த பகுதி மக்களும் அதற்கு பிறகு பிரதிவாதிகளும் அந்த பாதை வழியாக சென்று வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கு போட்ட பிறகு தடுத்து நிறுத்திவிட்டேன். நான் சுப்பிரமணியிடம் குறைந்த விலைக்கு நிலத்தை கேட்டு அவர் கொடுக்காததாலும் பிரதிவாதி உரிய விலைக்கு அந்த நிலத்தை வாங்கியதாலும் நான் அந்த வழிப்பாதையை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சுப்பிரமணியத்தை பார்த்ததேயில்லை. பிரதிவாதிகள் உத்தரவு பெற்ற பிறகும் நான் தடத்தை தடுத்ததால் எனக்கு எதிராக காரமடை காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் ஒரு புகாரை கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- P.K.Sivakumar**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.